## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் - 2016

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 108 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்களனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களின் மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் காசுப்பாய்ச்சலும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் காண்பிக்கப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நானாவித முற்பணங்களாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,403,810 ஆன மீதியில் உள்ளடங்கியுள்ள 10 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரை பழமைவாய்ந்த ரூபா 684,373 ஆன முற்பணத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரசாயண ஆய்வுகூட கட்டிடம் மற்றும் புதிய கலையகம் என்பவற்றை புதுப்பிக்கும் பணிகளை ஒப்பந்ததாரர் இடைநடுவே நிறுத்தியிருந்தமையால், 2012 ஏப்ரல் 25 ஆந் திகதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், ஒப்பந்ததாரருக்குச் செலுத்தியிருந்த ரூபா 2,268,483 முற்பணத் தொகையிலிருந்து செய்யப்படாத வேலைகளிற்காக அறவிடப்பட ரூபா 1,764,013 தொகை செயலாற்றல் முறியிலிருந்து அறவிடப்படாதிருந்ததுடன், அத் தொகையினை ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கற்கை விடுமுறைகளைப் பெற்று வெளிநாடு சென்றிருந்த 58 உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் பிணைமுறிகளை முறித்துக் கொண்டமைக்காக அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 79,046,345 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய 2 ஆண்டுகளின் போது பிணைமுறிப் பெறுமதிகளை அறவிடுவதில் முன்னேற்றமொன்று காட்டப்பட்டிருந்த போதிலும், இதுவரை அறவிடப்படாதுள்ள 1 முதல் 9 ஆண்டுகள் வரையிலான பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 43,498,359 ஆகக் காணப்பட்டதுடன், 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட பெறுமதி ரூபா 35,547,986 ஆகும்.

(ii) 6 உத்தியோகத்தர்களிற்குரிய ரூபா 3,654,787 கூட்டுத்தொகையான பிணைமுறி மீதிகளை ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டிருந்த போதிலும், அவர்களில் மூன்று உத்தியோகத்தர்களிற்குரிய ரூபா 2,306,402 தொகையான பிணைமுறியினை சேமலாப நிதியத்திலிருந்து அறவிட்டுக்கொள்ளாது விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பதவி விலகிச் சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் 07 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 516,709 தொகையான இடர் கடன் மீதியினை பிணைதாரர்களிடமிருந்தேனும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அதில் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக 6 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 463,259 மீதியும் உள்ளடங்கியுள்ளது.

(ஊ) மரணமடைந்த ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 168,850 தொகையான கடன் மீதியினை பிணைதாரரிடமிருந்து அல்லது ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், பதவி நீக்கம் செய்யப்பட்ட இரண்டு ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 148,678 கடன் மீதி 7 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை | |
| (i) IX ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவு | மேலதிகநேரப் படியினைப் பெற்றுக்கொள்வதற்கு மேலதிக நேர வேலைகள் உண்மையாகவும் நியாயமாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளன என பல்கலைக்கழகத்தின் நிதியாளர் தனிப்பட்ட முறையில் திருப்திப்படுதல் வேண்டும். அதற்கமைய மேலதிக வேலை நேரத்தில் உரிய வேலைகள் செய்யப்படுகின்றன எனவும் வீணடிக்கப்பட்ட நேரத்திற்காக கொடுப்பனவு செய்யப்படவில்லை எனவும் திருப்தியடைவதற்காக உரிய ஆய்வு முறைகளையும் அறிக்கைகளையும் வைத்திருக்கும் வழிமுறையொன்றை தயாரித்து பேணுதல் வேண்டுமாயினும், பல்கலைக்கழகத்தினால் அவ்வாறான வழிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |
| (ii) IX ஆம் அத்தியாயத்தின் 6.5 ஆம் பிரிவு | மேலதிகநேரக் கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் மணித்தியாலத்தில் நான்கில் ஒரு பங்கிற்கு குறைவான காலம் கருத்திற்கொள்ளப்படக் கூடாத போதிலும், 5 உத்தியோகத்தர்களிற்கு 68 சந்தர்ப்பங்களில் மணித்தியாலத்தில் நான்கில் ஒரு பங்கிற்கு குறைவான காலத்திற்காக ரூபா 3,299 செலுத்தப்பட்டிருந்தமை 15 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய தெரிவுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது. |
| (iii) IX ஆம் அத்தியாயத்தின் 2.1 | குறிப்பாக தீர்மானிக்கப்பட்டு, சாதாரண கடமைகளிற்குப் |

| | |
|---|---|
| மற்றும் 2.2 ஆம் பிரிவுகள் | புறம்பான, அவசர வேலைகளிற்காகவே மேலதிக நேரப் படியினை செலுத்துவதற்கு முடியுமான போதிலும், 15 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய மாதிரிப் பரிசோதனையின் போது அவர்களில் 06 பேர் வார இறுதி நாட்களில் மேலதிக நேர வேலைகளில் ஈடுபட்டு திங்கட் கிழமைகளில் விடுமுறைகளைப் பெற்றுக்கொண்டிருந்த 10 சந்தர்ப்பங்களும், 03 உத்தியோகத்தர்கள் வெள்ளிக் கிழமைகளில் விடுமுறைகளைப் பெற்றுக்கொண்டிருந்த 03 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. |
| (iv) XXVI ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | நிதி ஆண்டின் இறுதியில் நிறுவனத்திற்குச் சொந்தமான அனைத்து பொருட்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் என்பன குறித்த பணிக்காக நியமிக்கப்படுகின்ற மெய்மையாய்வுச் சபையினால் சரி பிழை பார்க்கப்பட வேண்டிய போதிலும், 2005 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பல்கலைக்கழ நூலகப் புத்தகங்கள் தொடர்பில் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | |
| (i) 3.7 மற்றும் 3.8 ஆம் பந்தி | ஊழியர்களின் கடன் தவணைப் பணங்கள் தொடர்ச்சியாக மாதாந்தம் அறவிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் 03 சந்தர்ப்பங்களில் அவ்வாறு குறித்துரைத்த காலப்பகுதியில் தொடர்ச்சியாக அறவிடப்படாதிருந்த கடன் தவணைப் பணத்தின் பெறுமதி ரூபா 306,655 ஆகும். |
| (ii) 3.18 ஆம் பந்தி | கடன் தொகைகளை அறவிடுவதற்கு அல்லது அறவிடுவதற்காக திருப்திகரமான வழிமுறைகளில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத ரூபா 1,841,820 இடர் கடன் மீதிக்கு உரித்துடைய 20 உத்தியோகத்தர்களிற்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | (i) பணி நிமித்த முற்பணத்தின் உச்ச எல்லையான ரூபா 100,000 இனை விஞ்சி 11 உத்தியோகத்தர்களிற்கு 14 சந்தர்ப்பங்களில் ரூபா 2,632,831 முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், பதவிநிலை உத்தியோகத்தர்களிற்கு மாத்திரம் பணி நிமித்த உப கட்டுநிதிகளை விடுவிப்பதற்குப் பதிலாக பதவிநிலையற்ற பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்களிற்கும் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| | (ii) பணி நிமித்த முற்பணத்தைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் குறித்த பணி |

| | | |
|---|---|---|
| | | நிறைவேற்றப்பட்டவுடன் அல்லது 10 நாட்களிற்குள் அந்த முற்பணத்தை தீர்வு செய்யவேண்டிய போதிலும், ரூபா 972,425 தொகையான 25 முற்பணங்கள் 13 நாட்கள் முதல் 58 நாட்கள் வரையிலான காலவீச்சில் தாமதிக்கப்பட்டு தீர்க்கப்பட்டிருந்தன. மேலும், கட்டுநிதியானது அது வழங்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் திர்க்கப்பட வேண்டிய போதிலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 402,920 பெறுமதியான 07 கட்டுநிதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள்<br>------------------------------------------------------------ | |
| | (i) 2002 மே 16 ஆந் திகதிய 803 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் டீஎம்எஸ்/7777/ ரீடீபி/எஸ்ஜேபி ஆம் இலக்க 2014 செப்தெம்பர் 16 ஆந் திகதிய கடிதம் | பல்கலைக்கழகத்தின் நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்குத் தேவையான பதவியணிக்கு செயற்திட்ட முகாமையாளர், செயற்திட்ட நிர்வாக உத்தியோகத்தர், அளவுத்திட்ட ஆய்வாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகிய பதவிகளிற்காக ஆட்சேர்ப்புச் செய்கையில் உரிய வழிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2002 யூலை 22 ஆந் திகதிய 806 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) ஏனைய பல்கலைக்கழகங்களிலிருந்து ஏழாண்டு விடுமுறைகளைப் பெற்று வருகை தருகின்ற உத்தியோகத்தர்கள் குறித்த பதவிகளிற்கு மாத்திரம் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 2 சந்தர்ப்பங்களில் இரண்டு உயர் பதவிகளிற்காக கீழ்நிலைப் பதவிகளிற்குரிய இரண்டு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.<br><br>(ii) குறித்த பதவியில் கடமைபுரிந்த உத்தியோகத்தர் சம்பளமற்ற விடுமுறையில் இருப்பின் மாத்திரமே ஏழாண்டு விடுமுறைக் காலத்தில் ஏனைய பல்கலைக்கழகத்தில் சமாந்தரப் பதவிகளில் ஏற்படுகின்ற வெற்றிடங்களில் கடமையாற்றுவதற்காக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட முடியுமான போதிலும், முன்னாள் நிதியாளரின் ஏழாண்டு விடுமுறைக் காலத்தில் ஏழாண்டு விடுமுறையினைப் பெற்றுக்கொண்டிருந்த கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிதியாளர் இப் பல்கலைக்கழகத்தின் நிதியாளராக நியமிக்கப்பட்டிருந்தார். அதற்கமைய, ஒத்த காலப்பகுதிக்காக நிதியாளர் பதவிகளிற்கு ரூபா 2,328,598 மற்றும் ரூபா 1,731,280 என முறையே இரண்டு நிரந்தர மற்றும் தற்காலிக உத்தியோகத்தர்களிற்கு சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. |

(iii) 2016 மார்ச் 01 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை

| | |
|---|---|
| 8.4.2 ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற சுயாதீன நிதிப் பாடநெறிகளிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், மானிடக் கலைகள் மற்றும் சமூகவியல் பீடத்தின் 04 பாடநெறிகள், முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் 05 பாடநெறிகள் மற்றும் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் 15 பாடநெறிகளிற்காக அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 5.1.6 ஆம் பிரிவு | நேர்க் கிரயங்கள் கழிக்கப்பட்ட சுயாதீன நிதிப் பாடநெறி வருமானத்திலிருந்து 0.01 சதவீதம் பல்கலைக்கழகத்தின் நிதிச் செயற்பாட்டு செலவின விடயத்தின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மாற்றப்பட்டிருக்கவில்லை. |
| 5.5 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் 1 ஆம் இலக்க மாதிரி வடிவத்திற்கமைய சுயாதீன நிதிப் பாடநெறி வருமானச் செலவினக் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 156,499,651 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 17,883,619 ஆனமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் நிதிசார் விளைவு ரூபா 138,616,032 இனால் பின்னடைந்திருந்தது. மீளாய்வாண்டிற்கான அரசாங்க மீண்டெழும் மானியம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 238,159,842 இனால் அதிகரித்திருந்த போதிலும், உள்ளக வருமானம் ரூபா 16,019,106 இனால் குறைவடைந்தும், சம்பளமும் படிகளும் மற்றும் ஊழியர் பணிக்கொடை ஏற்பாடு ரூபா 243,468,389 இனாலும், ஒப்பந்தச் சேவைகளும் பராமரிப்புச் செலவினமும் ரூபா 102,555,787 இனாலும் அத்துடன் பிரயாணச் செலவினம் ரூபா 18,527,675 இனாலும் அதிகரித்தமையே மேற்கூறப்பட்ட பின்னடைவிற்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன.

மீளாய்வாண்டு மற்றும் முன்யை 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு முதல் நிதி விளைவுகளில் தொடர்ச்சியான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அந்த வீழ்ச்சி ரூபா 51,493,938 ஆகக் காணப்பட்டது. இருப்பினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை சீராக்கியதன் பின்னர் 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,254,759,552 ஆகக் காணப்பட்ட பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2,394,246,291 வரை தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

2014 ஆம் ஆண்டில் ரூபா 9.97 மில்லியனாகக் காணப்பட்ட பிரயாணச் செலவினம் 2015 ஆம் ஆண்டில் ரூபா 27.59 மில்லியன் வரை ரூபா 17.62 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன், முன்னைய அண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அது ரூபா 46.12 மில்லியன் வரை 67 சதவீதத்தினால் மேலும் அதிகரித்திருந்தது. 2014 ஆம் ஆண்டில் ரூபா 6.09 மில்லியனாகக் காணப்பட்ட வெளிநாட்டு பிரயாணச் செலவினம் மீளாய்வாண்டில் ரூபா 41.31 மில்லியன் வரை 578 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், அது ஒட்டுமொத்த பிரயாணச் செலவினத்தில் 89.56 சதவீதமாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 3.2 நிறுவனத்தினாலும் நிறுவனத்திற்கு எதிராகவும் ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்டரீதியான சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக முன்னாள் விரிவுரையாளர் ஒருவரினால் மாவட்ட நீதிமன்றத்திலும், பதவி விலக்கியமைக்காக இரண்டு ஊழியர்கள் மற்றும் சேவை நீடிப்புச் செய்யப்படாமைக்கு எதிராக ஒரு ஊழியரினால் தொழில் நியாயச் சபையின் 03 வழக்குகள் பல்கலைக்கழகத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்தன.

(ஆ) பிணை முறிகள் முறிக்கப்பட்டமை காரணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 5,103,826 தொகையினை அறவிடுவதற்காக பல்கலைக்கழகத்தினால் முன்னாள் விரிவுரையாளர் ஒருவருக்கு எதிராக கங்கொடவில மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் பொறியியல் பீடம், தொழில்நுட்ப பீடம், வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு மற்றும் பட்டப்பின் படிப்பு பீடம் ஆகியன தவிர்ந்த ஏனைய 4 பீடங்களில் கல்வி கற்றிருந்த 11,609 மாணவர்களிற்கான மீண்டெழும் செவினமாக ரூபா 2,896,912,408 செலவிடப்பட்டிருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் 11,568 மாணவர்களிற்காக ரூபா 2,526,314,151 மீண்டெழும் செவினமாக செலவிடப்பட்டிருந்தது. குறித்த செலவினம் பீடங்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர் கணிப்பிடப்பிடப்பட்டிருந்த மாணவரொருவருக்கான கிரயம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி மாணவரொருவருக்கான சராசரிக் கிரயம் ரூபா 31,152 ஆல் அல்லது 14 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

| **பீடம்** | **மாணவரொருவருக்கான கிரயம்** | |
|---|---|---|
| | **2016** | **2015** |
| | ரூபா | ரூபா |
| பிரயோகரீதியான விஞ்ஞான பீடம் | 314,288 | 271,122 |
| மானிடக் கலைகள் சமூக விஞ்ஞான பீடம் | 216,341 | 181,542 |
| முகாமைத்தவ வர்த்தக பீடம் | 185,827 | 160,194 |
| மருத்துவ பீடம் | 542,176 | 497,261 |
| **மாணவரொருவருக்கான சராசரிக் கிரயம்** | **251,005** | **218,388** |

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பல்கலைக்கழகம் ஆகியவற்றால் பேணப்படுகின்ற அறிக்கைகளிலுள்ள தகவல்களின் பிரகாரம் முன்னைய 03 கல்வி ஆண்டுகளிற்காக மாணவர்களை சேர்த்துக்கொள்ளல் தொடர்பான பகுப்பாய்வொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| **கல்வி ஆண்டு** | **சேர்த்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை** | **சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|---|
| | | **பல்கலைக்கழகத்தின் படி** | **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் படி** | **வேறுபாடு** |
| 2013/2014 | 2,750 | 2,886 | 2,937 | (51) |
| 2014/2015 | 2,800 | 2,915 | 2,990 | (75) |
| 2015/2016 | 3,260 | 3,271 | 3,213 | 58 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015/2016 ஆம் கல்வியாண்டு தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் காண்பிக்கப்படுகின்ற எண்ணிக்கையினைக் காட்டிலும் கூடுதலான மாணவர் எண்ணிக்கையும் முன்னைய கல்வியாண்டிற்காக குறைவான எண்ணிக்கையும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மாணவர்களை சேர்த்துக்கொள்ளல் தொடர்பிலான தீர்மானத்தை மேற்கொள்கையில் இந்த இரண்டு நிறுவனங்களினதும் தகவல்கள் திருத்தமாக பேணப்பட்டிருக்காமை பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

(ii) பல்கலைக்கழக பீடங்களின் அடிப்படையில் கருத்திற்கொள்கையில் அந்தந்த பீடங்களிற்காக முன்னைய 3 கல்வி ஆண்டுகளில் சேர்த்துக்கொள்வதற்கு வாய்ப்புக்கள் காணப்பட்டிருந்த போதிலும், சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்காத மாணவர்களின் எண்ணிக்கையுடன் சம்பந்தப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கல்வி ஆண்டு** | **சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்காத மாணவர்களின் எண்ணிக்கை** | | | | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| | **மருத்துவ பீடம்** | **பிரயோக விஞ்ஞான பீடம்** | **முகாமைத்துவ வர்த்தக பீடம்** | **மானிடக் கலைகள் சமூக விஞ்ஞான பீடம்** | |
| 2013/2014 | 18 | - | - | - | 18 |
| 2014/2015 | 13 | 222 | 06 | - | 241 |
| 2015/2016 | 01 | 51 | 05 | 07 | 64 |
| மொத்தம் | **32** | **273** | **11** | **07** | **323** |

இந்த சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்காத மாணவர்களின் எண்ணிக்கையில் 94 சதவீதத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் மருத்துவம் மற்றும் விஞ்ஞான பாடநெறிகளிற்கான மாணவர்களாக காணப்பட்டமையும், பல்கலைக்கழகத்தில் போதியளவு இடவசதிகள் காணப்பட்ட போதிலும் 323 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்காமை காரணமாக பாதகமான பொருளாதார மற்றும் சமூக தாக்கங்கள் ஏற்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளின் மூலம் அப் பல்கலைக்கழகத்தின் தரத்தினை உயர்த்த முடிவதுடன், தேசிய பொருளாதாரத்திற்கும் பாரிய பங்களிப்பினை வழங்க முடிகின்றது. ஆகையால், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஆராய்ச்சிகளிற்கு வழங்குவதற்காக அரசாங்கத்தினால் பாரியளவு நிதிஏற்பாட்டுத் தொகை வருடந்தம் ஒதுக்கப்படுவதுடன், மீளாய்வாண்டில் ஆராய்ச்சிப் படியான ரூபா 97.03 மில்லியனை உள்ளடக்கி ரூபா 172.78 மில்லியன் அதற்காக செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த நிதி ஏற்பாட்டிலிருந்து பல்வேறு ஆராய்ச்சிப் பிரேரணைகளிற்காக ஆய்வு உதவிகளை வழங்குவதற்கு பல்கலைக்கழகம் பின்பற்றியிருந்த நடைமுறை மற்றும் ஆராய்ச்சிகளின் செயன்முன்னேற்றம் என்பன திருப்தியற்ற நிலையில் காணப்படுகின்றமை பின்வரும் விடயங்களின் படி அவதானிக்கப்பட்டது.

(i) 2007 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை 90 விரிவுரையாளர்கள் ஆய்வு உதவிகளை பெற்றுக்கொண்டிருந்த போதிலும், 2017 ஏப்ரல் மாதம் வரையிலும், குறித்த ஆய்வுகளுடன் சம்பந்தப்பட்ட இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தினுள் ஆராய்ச்சிப் பிரேரணைகளை சமர்ப்பித்திருந்த 18 விரிவுரையாளர்களிற்காக பல்கலைக்கழகத்தினால் ரூபா 13,790,181 ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 10,288,614 ஆராய்ச்சி மானியமாக குறித்த விரிவுரையாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் மேற்குறிப்பிட்ட விரிவுரையாளர்களினால் ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், இதற்காக தாமதிக்கப்பட்டிருந்த காலம் 01 மாதம் முதல் 25 மாதங்கள் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2016 மார்ச் 18 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், மீளாய்வாண்டில் தேசிய மட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த 5 பிரிவுகளின் கீழ் ஆராய்ச்சிகளை நடாத்துவதற்காக ரூபா 60 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 10 மில்லியன் சிறுநீரக நோய்கள் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீட்டுக் குழுவினால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த ஆராய்ச்சி உதவிகளை வழங்குவதற்கான கடிதத்திலுள்ள நிபந்தனைகளின் படி, ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த திகதி அல்லது ஆரம்பிக்கப்படுகின்ற திகதியினை பிரதிப் பதிவாளரின் ஊடாக கற்கைகள் மாணவர் செயற்பாட்டு வெளியீட்டுப் பிரிவிற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 2,905,995 நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்த 13 விரிவுரையாளர்கள் அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட திகதிகளை அறிவித்திருக்காமையால் அறிக்கைகளின் காலதாமதத்தினை உரியவாறு இனங்காண்பதற்கு முடிந்திருக்கவில்லை.

(v) ஆராய்ச்சி உதவிகளை செலுத்துதல் தொடர்பான முழுமையான தகவல்களை வெளிப்படுத்தக்கூடியவாறு குறித்த பிரிவுகளினால் ஆராய்ச்சி உதவிக் கோவைகள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை.

(vi) ஆராய்ச்சி உதவிகளை பெற்றுக்கொண்ட விரிவுரையாளர்கள் ஆய்வுப் பிரேரணைகளை உரிய திகதிகளில் வழங்கியிருக்காமை, ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்திருக்காமை மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளை நாளதுவரையாக சமர்ப்பித்திருக்காமை காரணமாக உண்மையாகவே ஆராய்ச்சிகள் செய்யப்பட்டனவா என்பதும் தாமதித்துச் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆய்வு அறிக்கைகள் எந்தளவு தூரம் பயனுள்ளன என்பதும் சிக்கலானதாக உள்ளதுடன் ஆராய்ச்சி உதவி நிதி ஏற்பாட்டின் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடையப்பட்டனவா என்பதும் கணக்காய்வில் சிக்கல்வாய்ந்ததாக காணப்பட்டது.

(ஈ) உலகிலுள்ள பல்கலைக்கழகங்களிடையே உள்நாட்டு பல்கலைக்கழகங்களை உயர் நிலைக்கு எடுத்துச்செல்லும் நோக்குடன் 2011 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட செயற்திட்டங்களிற்காக மீளாய்வாண்டு வரை ரூபா 125.38 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 120.98 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், சர்வதேச பல்கலைக்கழகங்களின் தரப்படுத்திலிற்கமைய ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்திற்கு கிடைத்திருந்த இடம் கீழே தரப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **கிடைத்திருந்த இடம்** |
|---|---|
| 2012 | 2758 |
| 2013 | 5869 |
| 2014 | 3090 |
| 2015 | 4282 |
| 2016 | 3752 |

இந்த தரப்படுத்தலிற்கமைய பல்கலைக்கழகம் திருப்தியான நிலையில் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன், 2011 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட செயற்திட்டங்கள் சம்பந்தமான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(i) சர்வதேச பல்கலைக்கழக தரப்படுத்தலின் போது ஆராய்ச்சிகள் மற்றும் பிரித்தெடுத்தல்களிற்காக 60 சதவீத புள்ளிகள் வழங்கப்படுகின்றமையால் அந்த இலக்கினை அடைந்துகொள்வதற்காக பல்கலைக்கழகத்தின் செயலாற்றலை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும், செயற்திட்டங்களினால் அது குறித்து போதியளவு கரிசனை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆராய்ச்சிகளின் மேம்பாட்டிற்காக பொதுவான ஆய்வுகூட வசதியினை வழங்கும் நோக்குடன் ஆய்வுகூட உபகரணங்கல் மற்றும் கட்டிட இடவசதி ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்காக முன்னைய ஆண்டில் ரூபா 495,664 செலவிடப்பட்டிருந்த போதிலும், பின்னர் அப் பணிகள் கைவிடப்பட்டிருந்தன.

(உ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 23,976,681 பெறுமதியான 40 ஆய்வு மானிய செயற்திட்டங்கள் செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாக 15 விடுதிகளும், வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த 27 விடுதிகளுமாக 42 விடுதிகள் காணப்பட்டதுடன், அந்த அனைத்து விடுதிகளிற்காகவும் இரவு 8 மணிமுதல் அடுத்த நாள் காலை 8 மணி வரை இணையதள வசதியினை வழங்குவதற்கும் அப் பணியினை 2015 ஆம் ஆண்டில் பூரணப்படுத்துவதற்கும் திட்மிடப்பட்டிருந்த போதிலும், 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் 2 விடுதிகளிற்கு மாத்திரமே இணையதள வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(எ) பிரயோக விஞ்ஞான பீடம், மானிடக் கலைகள் சமூக விஞ்ஞான பீடம், முகாமைத்துவ வர்த்தக பீடம் மற்றும் மருத்துவ பீடம் ஆகியவற்றால் புதிதாக 09 பாடநெறிகளும், பட்டப்பின் படிப்பு பாடநெறியொன்றும், டிப்ளோமா பாடநெறியொன்றும், 16 சான்றிதழ் வழங்கும் பாடநெறிகளும், பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடத்தினால் 7 புதிய பாடநெறிகளும் 5 பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறிகளும் ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச் செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 மே 31 வரையிலும் அப்பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பல்கலைக்கழக நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 436 மில்லியன் செலவிடப்பட்டு வர்த்தக கடைத் தொகுதியொன்றையும், குடும்ப பயிற்சி நிலையமொன்றையும், டெங்கு ஆராய்ச்சி நிலையமொன்றையும், கேட்போர் கூடமொன்றையும் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 மே 31 வரையிலும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பிரயோக விஞ்ஞான பீடத்தின் பூந்தோட்டவியல் கற்கைகள் பிரிவினால் மரக்கன்றுகள் உற்பத்தி நிலையமொன்றும் உணவு விஞ்ஞான தொழில்நுட்ப கற்கைகள் பிரிவினால் உணவுத் தொழில்நுட்ப பகுப்பாய்வு நிலையமொன்றும் 2015 ஆம் ஆண்டளவில் தாபிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2017 மே 31 வரையிலும் அவைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் சம்பளத்தினை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற மென்பாகத்தில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக மீளாய்வாண்டில் பதவியணியினருக்குச் செலுத்தப்பட்டிருந்த ஊழியர் வேதனங்களின் சரியான தன்மை தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டிருந்தது. அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளிற்கமைய, தற்போது பயளன்படுத்தப்பட்டு வருகின்ற பல்கலைக்கழக கணனிப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட அரை தன்னியக்க மென்பாகத்துடன் கூடிய சம்பளப் பொதியில் காணப்படும் குறைபாடுகளை அகற்றி அந்த முறையினை நாளதுவரையாக்குவதற்கும், அது சம்பந்தமாக முறைமைக் கணக்காய்வொன்றை மேற்கொண்டு 06 மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த காலத்தில் மென்பாகத்தின் தரத்தினை மேம்படுத்துவதற்கும், முடியுமானளவு விரைவாக ஒட்டுமொத்த கணக்கீட்டு முறையின் தரத்தினையும் நம்பகத் தன்மையினையும் முன்னேற்றுவதற்கு ஏற்ற விதத்தில் புதிய கணனி முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு 2017 ஆகஸ்ட் 10 ஆந் திகதி இடம்பெற்ற 466 ஆவது ஆளுகைச் சபையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) காசுப் பெறுவனவுகள் மற்றும் அப் பெறுவனவுகளின் காலப் பகுதியினை உரியவாறு மதிப்பீடு செய்யாது செலவுகள் செய்யப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் பெப்ரவரி மாதம் முதல் திசெம்பர் வரை நாளாந்தம் ரூபா 7,221,447 முதல் ரூபா 80,855,247 வரையான வீச்சில் காசுப் புத்தகத்தில் பாதகமான மீதி ஏற்பட்டிருந்தது.

(இ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 114 ஆம் பிரிவின் பிரகாரம், உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால் ஒவ்வொரு மதிப்பீட்டு ஆண்டிற்காகவும் குறிப்பாக காட்டப்பட்டுள்ள வரி விதித்தல் அட்டவணைக்கு அமைய உழைக்கும் போதே செலுத்தும் வரி தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஏனைய பல்கலைக்கழகங்களிலிருந்து ஏழாண்டு விடுமுறைகளைப் பெற்று வருகைதருகின்ற உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்துகையில் அவர்களது உழைப்புக்களிலிருந்து உழைக்கும்போதே செலுத்தும் வரியினை அறவிடுவதற்காக உரிய வரி விதித்தல் அட்டவணையினை பயன்படுத்தியிருக்காமை காரணமாக 6 உத்தியோகத்தர்களின் உழைப்புக்களிலிருந்து ரூபா 330,110 குறைவாக வரி அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் பல்வேறு பீடங்களிற்காக 205 வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவைகள் பெறப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தமிடப்பட்ட வேதனங்களின் மொத்தம் ரூபா 37,153,200 இனைக் காட்டிலும் அதிகமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், அவர்களது நிரந்தர சேவையாற்றும் இடங்களை வெளிப்படுத்திக்கொள்வதற்கு முறையான நடைமுறையொன்று காணப்படாதிருந்ததுடன், தகவல்களை சமர்ப்பித்திருந்தோரிடமிருந்து மாத்திரம் இரட்டை தொழிலின் கீழ் உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) ஊழியர் நலனோம்பலை குறிக்கோளாகக் கொண்டு ரூபா 1,032,118 தொடக்கச் செலவில் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக பதவியணியினரின் பிள்ளைகளிற்கான மதியநேர காப்பகம் மற்றும் முன்பள்ளி நிர்வாக நடவடிக்கைகளிற்காக யாப்பொன்று அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த யாப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், முகாமைத்துவச் சபைக் கூட்டங்களும் நிறைவேற்றுச் சபையின் கூட்டங்களையும் நடாத்துதல், கட்டணங்களை அறவிடுதல், வருமானச் செலவினக் கணக்கை தயாரித்தல், அக் கணக்கினை முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல் மற்றும் கணக்காய்வை மேற்கொள்ளல் என்பன இடம்பெற்றிருக்கவில்லை. மேலும், பல்கலைக்கழகத்தின் அன்றாட செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்படும் வளங்கள் மதிய நேரக் காப்பகத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் முறையான அறியத்தருதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை, பதவியணியினரை சேர்த்துக்கொள்ளல், பயிற்சியளித்தல் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் உரிய நியமங்கள் காணப்பட்டிருக்காமை போன்ற அநேக முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(உ) பல்கலைக்கழகத்தின் பல்வேறு செயற்பாடுகளிற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த முற்பணங்கள் உரிய பணிகளிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காமை காரணமாக முற்பணத்திலிருந்து 55 சதவீதத்திற்கும் 92 சதவீதத்திற்கும் இடைப்பட்ட தொகை சேமிக்கப்பட்டு கைவசம் வைத்திருக்கப்பட்டிருந்த 9 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதற்கமைய செலவினங்கள் இனங்காணப்படாது முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கல்விசார் பதவியணியினரின் வருகைகள், வெளிச்செல்கைகள் மற்றும் விடுமுறைகளை உறுதிப்படுத்துவதற்கான நடைமுறையொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென 2010 செப்தெம்பர் 07 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், இதுவரையிலும் அவ்வாறானதோர் நடைமுறை தயாரிக்கப்பட்டிராமையால் கல்விசார் பதவியணியினருக்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,778,988,859 தொகையான சம்பளங்கள் மற்றும் படிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை. ஏனைய அரசாங்க நிறுவனங்களினால் செயற்படுத்தப்படுகின்ற கடமைகளிற்காக வருகைதருதல் மற்றும் வெளியேறிச் செல்லும் நேரங்களை குறிப்பிடுவதற்கான எந்தவொரு முறையும் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினர் தொடர்பில் நடைமுறைப்படுத்தப்படாதிருந்ததுடன், விரிவுரையாளர்கள் உரிய பிரகாரம்

விரிவுரைகளில் பங்குபற்றுகின்றமையால் அவ்வாறான தேவை ஏற்படவில்லை என்பதாக கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், விரிவுரையாளர்கள் விரிவுரைகளிற்காக வருகை தருகின்றமை சம்பந்தமாக சில கல்விப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த விடயங்களின் பிரகாரம் அது தொடர்பில் திருப்திகரமான கட்டுப்பாட்டு முறையொன்று காணப்படவில்லை என்பது பின்வரும் விடயங்களிலிருந்து அவதானிக்கப்பட்டது.

(i) அரசியல் விஞ்ஞான கல்விப் பிரிவினது 2014/2015 இன் அரையாண்டிற்கான செயலாற்றல் பரிசோதனையின் போது விரிவுரை வழங்குதல் திட்டத்தின் படி, ஒவ்வொரு பாடத்திற்காகவும் அரையாண்டினுள் நடாத்தப்பட வேண்டிய விரிவுரை மணித்தியால விகிதாசாரத்திற்கமைய கால அட்டவணை தயாரிக்கப்படாதிருந்தமையும் கால அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டிருந்த விரிவுரை மணித்தியால எண்ணிக்கையிலும் குறைவாக விரிவுரை மணித்தியாலங்கள் இடம்பெற்றிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இதற்கமைய, 17 பாடங்களிற்குரிய விரிவுரை வழங்கும் திட்டம், விரிவுரை கால அட்டவணை மற்றும் கையொப்பமிடுதல் ஆவணங்களை ஒப்பிடுகையில் 176 விரிவுரை மணித்தியாலங்கள் குறைவாக நடாத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், விரிவுரைகளிற்கு உரிய பிரகாரம் பங்குபற்றியிருந்த விரிவுரையாளர்கள் மற்றும் அவ்வாறு செய்யாதோர்களை உறுதியாக இனங்காணக்கூடிய விதத்தில் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை வெளிப்படுத்தப்பட்டது.

(ii) புவியியல் கற்கைகள் பிரிவின் விரிவுரை வழங்கல் திட்டம் மற்றும் கால அட்டவணை என்பவற்றின் அடிப்படையில் விரிவுரைகளை நடாத்துவதன் செயன்முன்னேற்ற பரிசோதனையின் போது, கற்கைகள் பிரிவில் நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ள 09 விரிவுரையாளர்களில் 06 பேர் 15 சந்தர்ப்பங்களில் விரிவுரை வழங்கல் திட்டத்திற்கமைய நடாத்த வேண்டிய குறைந்தபட்ச விரிவுரை மணித்தியாலங்களை நடாத்தியிருக்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது. அத்துடன், முதலாம் அரையாண்டிற்காக முறையே 30, 06, 04 மற்றும் 04 விரிவுரை மணித்தியாலங்கள் என்ற ரீதியில் 4 விரிவுரையாளர்களால் நடாத்தப்பட வேண்டிய எந்தவொரு விரிவுரையும் நடாத்தப்பட்டிருக்காமையும், விரிவுரைகளை மேற்கொள்கையில் நிரந்தர விரிவுரையாளர்களால் நடாத்தப்பட வேண்டிய விரிவுரை மணித்தியாலங்கள் தற்காலிக விரிவுரையாளர்களை கொண்டு நடாத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. மேலும், விரிவுரை வழங்கும் திட்டத்தில் நிரந்தர விரிவுரையாளர் ஒருவருக்கு 02 மணித்தியால விரிவுரை ஒதுக்கப்பட்டு தற்காலிக விரிவுரையாளர் ஒருவருக்கு 28 மணித்தியாலங்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 4.3 இயக்கச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய ஒப்பந்த சேவைகளிற்காக பல்கலைக்கழகத்தினால் ரூபா 350.18 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் 30 சதவீதமாகிய ரூபா 106.37 மில்லியன் சுத்திகரிப்பு சேவையினை மேற்கொள்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. இச் செலவினத்திற்காக கூடிய பங்களிப்பை செய்துள்ள திண்மக் கழிவுகளை அகற்றும் சேவை வழங்குனரை தெரிவு செய்கையில் கொள்வனவு வழிகாட்டல்கள் உரிய முறையில் பின்பற்றப்படாதிருந்ததுடன், வழங்கப்பட வேண்டிய சேவைகள் குறித்து உரிய ஆய்வினை மேற்கொள்ளாது கூறுவிலைகள் கோரப்பட்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) அகற்றப்பட்டிருந்த திண்மக் கழிவுகளின் அளவுகள் மற்றும் கலிபவுசர்களின் பருமண் போன்றன உரியவாறு மேற்பார்வை செய்யப்பட்டு குறித்து வைத்திருக்கப்பட்டிருக்காமை காரணமாக முறையே ரூபா 528,846 மற்றும் ரூபா 4,554,000 அதற்காக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) கழிவுத் தாங்களின் இயலளவினை அளவிட்டு அதற்கமைய கொடுப்பனவை மேற்கொள்ளல், திண்மக் கழிவகற்றல் பாதுகாப்பு பிரிவின் பதிவுகளுடன் ஒப்பிட்டு அதற்கமைய கொடுப்பனவை மேற்கொள்ளல் மற்றும் கழிவு முகாமைத்துவம் போன்றன தொடர்பில் பல்கலைக்கழகம் போதியளவு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழக கல்வியின் தரத்தை உயர்த்தி, ஆராய்ச்சி அபிவிருத்தி, அயல் சமூகத்தின் சுற்றாடல், சமூக, கலாச்சார, இன மற்றும் பொருளாதார அபிவிருத்தியுடன் ஒன்றிணைந்து செயற்படுத்தும் நோக்குடன் சர்வதேச ரிதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழக நகர எண்ணக்கருவிற்கமைய, 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பல்கலைக்கழக நகர அபிவிருத்திக்கான 37 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2014 சனவரி 14 ஆந் திகதிய அமைச்சரவை/13/1730/521/056 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா 2,057 மில்லியன் திறைசேரி நிதிய மற்றும் ரூபா 187 மில்லியன் ஏனைய நிதிய மதிப்பீட்டின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்ற இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டின் இறுதியளவில் 37 செயற்திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,174.1 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமுடைய 27 செயற்திட்டங்கள் தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கொள்வனவு செயன்முறையேனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பல்கலைக்கழக நகர செயற்திட்டங்களின் பிரதான திட்டங்களை தயாரித்தல் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 6 செயற்திட்டங்கள் மாத்திரம் பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 151.2 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமுடைய அச் செயற்திட்டங்களிற்காக ரூபா 157.58 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(iii) சோரத மாவத்தையினை மறுசீரமைத்தல், மதிற்சுவர்கள் மற்றும் கேட்டுக்களை நிர்மாணித்தல் செயற்திட்டத்திற்காக சரியான மதிப்பீட்டினைத் தயாரிக்காது ரூபா 27.4 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த செயற்திட்டத்தினை பூரணப்படுத்துவதற்காக ரூபா 85.48 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(iv) டெங்கு ஆராய்ச்சி நிலையமொன்றை நிர்மாணித்து ஆய்வு உபகரணங்களை வழங்குவதற்காக ரூபா 137 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 22.78 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

(v) மருத்துவ பீடம் மற்றும் நிர்வாகக் கட்டிடத்தொகுதியின் அண்மித்த பகுதிகளில் மழை நீர் வழிந்தோடுவதற்கான வடிகால் முறைமையினை நிர்மாணிப்பதற்காக ரூபா 10 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதனை திட்டமிட்டு கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாத்திரம் ரூபா 4.05 மில்லியனிற்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருட்களின் இருப்பு மீதியினுள் ரூபா 3,895,026 பெறுமதியான காலங்கடந்த மற்றும் மெதுவாக நகரும் டோனர் இருப்பு காணப்பட்டது. களஞ்சியத்தில் போதியளவு இருப்பு காணப்படுகையில் பொருட்களிற்கு கோரிக்கையினை மேற்கொள்ளாது மீண்டும் கொள்வனவு செய்யப்பட்டமையினால் அந்த இருப்பில் ரூபா 2,021,408 பெறுமதியான 19 டோனர் வகைகள் எஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 05 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 191,416 பெறுமதியான வர்ணப்பூச்சு வகைகள், ரூபா 377,087 பெறுமதியான பிடவைகள் மற்றும் ரூபா 73,138 பெறுமதியான கணனி இருவெட்டு இருப்புக்களை கைதவிர்ப்பதற்கு அல்லது ஏனைய நடவடிக்கைகளிற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 300 மாணவர்களிற்கு விடுதி வசதிகளை வழங்கும் நோக்குடன் 1998 மே 05 ஆந் திகதி மேல் மாகாண சபைக்கு ரூபா 1.6 மில்லியன் செலுத்தி பொரலஸ்கமுவையில் அமைந்துள்ள 41.31 பேர்ச் காணி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், 2003 ஆகஸ்ட் 06 ஆந் திகதி கெஸ்பேவ பிரதேச செயலாளரினால் காணியின் உரித்து பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அத்திகதியிலிருந்து அக் காணி பயனுள்ள பணிகளிற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன், எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிரந்தர பதவியணியில் 481 பேருக்கும் ஒப்பந்த மற்றும் தற்காலிக பதவியணியில் 34 பேருக்கும் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அதில் காணப்பட்ட கல்விசார் பதவியணியினர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 217 ஆகும். பல்கலைக்கழத்திற்கு இவ்வாறானதோர் நிலைமை திருப்தியற்றதாகும் என்பதுடன், இந்த வெற்றிடங்களிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் பதிலாக தற்போது காணப்படுகின்ற நிரந்தர பதயணியினரிடமிருந்து வெளிவாரி பதவியணியினராக சேவையினை பெற்றுக்கொள்வதற்கும் ஏழாண்டு விடுமுறைகளின் மீது ஏனைய பல்கலைக்கழக உத்தியோகத்தர்களின் சேவையினை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) பதவியணியினரை அங்கீகரிக்கையில் கணனி தொழில்நுட்ப ஆலோசகர் மற்றும் கணனி நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் பதவிகளிற்காக நிரந்தர மற்றும் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், நிரந்தர மற்றும் தற்காலிக பதவிகள் உரியவாறு இனங்காணப்படாது ஒருங்கிணைந்த பதவி எண்ணிக்கையாக அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது.

**4.6 வாகனப் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாக 11 ஒதுக்கப்பட்ட வாகனங்களும் 30 குழாம் வாகனங்களும் காணப்பட்டதுடன், அவற்றில் 5 வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் காணப்பட்டன. உத்தியோகத்தர்களிற்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வாகனங்களையும் குழாம் வாகனங்களில் உள்ளடக்கி முறையான கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சில வாகனங்கள் முறைப்படியான மேற்பார்வையின்றி கல்விப் பிரிவுகளின் செயற்பாடுகளிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஒதுக்கப்பட்ட வாகனங்களை பயன்படுத்துவதற்காக உரித்துடைய 11 உத்தியோகத்தர்களிற்கு 10 மோட்டார் வாகனங்களும் ஒரு ஜீப் வாகனமும் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையினுள் ரூபா 2,300,640 பெறுமதியான எரிபொருளும் வழங்கப்பட்டிருந்தது. உபவேந்தர் தவிர்ந்த ஏனைய உத்தியோகத்தர்களின் கடமைகளின் தன்மையின் அடிப்படையில் தூரப் பிரதேசங்களிற்கான பிரயாணங்கள் குறைவாகக் காணப்பட்ட போதிலும், தனிப்பட்ட போக்குவரத்துக்களிற்காக கட்டுப்பாடின்றி உத்தியோகபூர்வ வாகனங்களை பயன்படுத்துதல், கூடிய எரிபொருள் நுகர்ச்சி கொண்ட வாகனங்கள் வழங்கப்பட்டிருத்தல் என்பன காரணமாக ஆண்டிற்கான மேலதிக எரிபொருளிற்கென மேற்குறிப்பிட்ட எரிபொருள் எல்லைக்கு மேலதிகமாக ரூபா 1,728,920 இனை செலவிட வேண்டியிருந்தது. அத்துடன், மேலதிக எரிபொருளிற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்கையில் அந்தந்த பயணங்களிற்காக வெவ்வேறாக விபரங்களை உள்ளடக்கி குறித்த உத்தியோகத்தரினால் அதிகாரத்தரப்பிற்கு தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், மாதாந்த அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சுகின்ற அனைத்து எரிபொருள் செலவுகளும் போக்குவரத்துப் பிரிவிற்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தரினால் ஆளுகைச் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிற்கு போதியளவு எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் இணைப்புச் செய்யப்படாதிருந்ததுடன், பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் எழுதுவினைஞர் தரத்திலுள்ள மூன்று உத்தியோகத்தர்கள் மாத்திரம் பதவியணியில் உள்ளடங்கியிருந்தனர். அவ்வாறே பல்கலைக்கழகத்தின் ஊழியர் சேமலாப நிதியங்களைச் செலுத்துகையில் அதனுடன் தொடர்புடைய கோவைகள் தொடர்பில் முன்கூட்டிய கணக்காய்வு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதலளித்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றமையால் போதியளவு உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு முடிந்திருக்கவில்லை.

**5.2 கொள்வனவுத் திட்டம்**

2006 சனவரி 25 ஆந் திகதிய அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், கொள்வனவு காலஎல்லை தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்கையில் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்த கொள்வனவுத் திட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் ரூபா 97,033,847 தொகைக்குரிய 50 கொள்வனவுகள் 2016 திசெம்பர் 30 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் தொடர்பில் கருத்திலெடுக்கப்படாது ஆண்டின் இறுதியில் சேமிப்பாகும் பணத்தொகையினை மாத்திரம் கருத்திற்கொண்டு 43 மீண்டெழும் தன்மை கொண்ட கொள்வனவுகள் 2016 திசெம்பர் 30 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 15,806,053 செலவிடப்பட்டிருந்தது.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 102 ஆம் பிரிவிற்கு முரணாக நிதிப் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் அப்பெறுமதிகளின் ஒத்த தொகைகளினால் பாதீட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டில் 16 சந்தர்ப்பங்களில் அவ்வப்போது பாதீடு திருத்தியமைக்கப்பட்டிருந்தது.

### 5.4 தீர்வு காணப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருத்துவ பீடத்திற்காக மெத் செவன காணியிலிருந்து 5 ஏக்கர் விஸ்தீரணமுடைய நிலத்தினை கையேற்பதற்காக 1994 யூன் 29 ஆந் திகதி எடுக்கப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 1998 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களில் ரூபா 24 மில்லியன் தொகையும், மீளாய்வாண்டில் ரூபா 50 மில்லியன் தொகையுமாக ரூபா 74 மில்லியன் மேல் மாகாணத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த காணியினை கையேற்கும் நடவடிக்கைகள் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 61.5 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கொஹுவல காணியும் கட்டிடமும் பல்கலைக்கழகத் தேவையுடன் இணக்கமுறாமையால் களனி பல்கலைக்கழகத்தின் அரங்காட்டற் கலைகள் நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், இந்த கையளிப்பு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், பல்கலைக்கழகத்தினால் பயன்படுத்தப்படாத சொத்தொன்று நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 70 மில்லியன் கிரயமுடைய பல்கலைக்கழகத்தின் கழிவு நீர் அகற்றல் செயற்திட்டத்திற்காக 2003 ஆகஸ்ட் 06 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான நிர்மாணங்களை திட்டமிடுவதற்காக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா 2,336,090 செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்காமை தொடர்பில் 2011 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது குறித்த செயற்திட்டத்தினை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பதலளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் நடைபெற்றுவரும் வேலைகளின் கீழ் அந்த மீதி காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 1990 ஆம் ஆண்டிலிருந்து கணக்குகளில் முற்பணமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,310,000 தொகை மஹரகம நகர சபைக்குச் செலுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், முற்பணத்தை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பணிகளிற்காக சம்பள மீள்நிரப்புதல் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த பெண் விரிவுரையாளர் ஒருவருக்குச் செலுத்தப்பட்டிருந்த சம்பளத்தில் உள்ளடங்கியுள்ள ரூபா 1,437,882 கல்விப் படியினை குறித்த நிறுவனத்தினால் மீள்நிரப்புவதற்கு முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தமையால், குறித்த தொகையினை அந்த விரிவுரையாளரிடமிருந்து அறவிட வேண்டிய போதிலும், அதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மீளாய்வாண்டிலேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சம்பள நிர்வாக முறைமை | உரிய தரத்திலமைந்த தன்னியக்க கணனி முறைமையின் தேவையினை சுட்டிக்காட்டுதல். |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்பினை முறைப்படியாக மேற்கொண்டிருக்காமை |
| (ஈ) | சுயாதீன நிதிப் பாடநெறிகளின் முகாமைத்துவம் | மேலதிக நிதிகள் உரிய விதத்தில் பயனபடுத்தப்பட் டிருக்காமையும் கணக்கீட்டுக் குறைபாடுகளும் |
| (உ) | ஆராய்ச்சி உதவிகள் மீதான உள்ளகக் கட்டுப்பாடு | ஆராய்ச்சி உதவிகளின் பயன்பாடுகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை மற்றும் செயன்முன்னேற்றத்தை பரிசீலிக்காமை |
| (ஊ) | உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறிகள் கட்டுப்பாடு | அறவிடப்பட வேண்டிய கட்டணங்களை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு போதிய கவனம் செலுத்தியிருக்காமை |
| (எ) | கொள்வனவு நடைமுறைகள் | கொள்வனவுத் திட்டத்திற்கமைய கொள்வனவுகளை மேற்கொண்டிருக்காமை மற்றும் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதில் குறைபாடுகள் காணப்படுதல். |